## மணப்பாறையில் – சாரண – சாரணியர் இயக்க வைர விழா:

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழா!

## 28.1.2025 முதல் 3.2.2025 வரை நடைபெற்று வரும் விழாவின் சிறப்பு அம்சங்கள்!










**திருச்சி, பிப்.3–**

**பாரத சாரண – சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (Jamboree) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழா 28.01.2025 அன்று முதல் 03.02.2025 வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெறுகிறது.**

இதன் சிறப்பு அம்சங்கள் வருமாறு:-

சாரண - சாரணியர் இயக்கம் என்பது உலகளாவிய இளைஞர்களுக்கான சீருடை இயக்கம் ஆகும். 3 வயது முதல் 25 வயது வரை உள்ள சிறார்களுக்கு வயதிற்கு ஏற்றவாறான செயல்பாடுகள் இவ்வியக்கத்தில் உள்ளது. இவற்றில் சாரணியர்களுக்கு மொழி, இனம், மதம் வேறுபாடுகளின்றி இளையோர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தும் களமாகும்.

சாரண சாரணியர் இயக்கம் 1907ஆம் ஆண்டு இராபர்ட் ஸ்டீபன்சன் ஸ்மித் பேடன் பவல் அவர்களால் பிரௌஸ்சீ தீவில் பரிசார்த்தமாக 20 சாரணணிகளுடன் தொடங்கப்பட்டது. உலக அளவில் இவ்வியக்கத்தில் 100 மில்லியன் சிறார்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள்.

இவ்வியக்கத்தில் ஒவ்வொரு நாடும் நாள்காண்டுகளுக்கு ஒரு முறை ஜம்புரி (Jamboree) என்று சொல்லக் கூடிய பெருந்திரளணியை நடத்துவார்கள். இந்தியாவில் தற்போது வரை 18 பெருந்திரளணிகளும், 5 சிறப்புப் பெருந்திரளணிகளும் நடைபெற்றுள்ளன.

### கலைஞர் தலைமையில் இயக்க பொன்விழா!

தமிழ்நாடு பாரத சாரண - சாரணியர் இயக்கம் பாக 2007 ஆண்டு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் சென்னை துரைப்பாக்கத்தில் இயக்க பொன்விழா பெருந்திரளணி நடைபெற்றது. இப்பெருந்திரளணியில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாரண - சாரணியர்கள் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் சாரண, சாரணியம் இயக்கம் பல்வேறு அமைப்புகளாக செயல்பட்டு வந்த நிலையில், தலைவர்களின் பெரும் முயற்சியால் ஒன்றிணைக்கப்பட்டு 1950-ம் ஆண்டு நவம்பர் 7-ம் நாள் பாரத சாரண - சாரணிய அமைப்பாக உருவாக்கப்பட்டு, தற்போது 75 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். மணப்பாறை சிப்காட் வளாகத்தில் வருகின்ற 28.01.2025 முதல் 03.02.2025 வரை பாரத சாரண சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி (Special Jamboree) மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

### 33 துணைக் குழுக்கள்!

பாரத சாரண - சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி நடைபெறுவதற்காக பெருந்திரளணி சபை, திட்டக்குழு, தொழில்நுட்பக்குழு, செயல்பாட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறைச் சார்பில் மேலும் 33 துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு பல்வேறு இயக்குநர்களும் குழு ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டு பணிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

பாரத சாரண - சாரணியர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகள் முடிவடைவதை முன்னிட்டு வைரவிழா தேசிய திரளணியாகவும், (Dimanon Jubilee National Jamboree) முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு விழாவாகவும் நடைபெறவுள்ளது.

### 20 ஆயிரம் பேர் பங்கேற்பு!

இந்த 75-ஆவது சாரணப் பெருந்திரளணி 2025, சனவரி 28-ல் இருந்து பிப்ரவரி 3 வரை தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை அருகே உள்ள சிப்காட் வளாகத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தமிழ்நாடு. இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏறத்தாழ 20 ஆயிரம் சாரண - சாரணியர்கள் பங்கேற்க உள்ளார்கள்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு தங்கள் கலாச்சாரம், பண்பாடு குறித்த செயல்பாடுகளை நிகழ்த்திக் காட்ட உள்ளனர்.

### தினசரி பல்வேறு நிகழ்வுகள்!

இவ்விழாவில் தினசரி நிகழ்வுகளாகவும், போட்டிகளாகவும், முகாம் கலை. மாநில நுழைவாயில், சாரண - சாரணிய திறன்கள், ஆக்க கலைத் திட்டம். ரங்கோலி, அணிவகுப்பு, இசைக்குழு அணிவகுப்பு. வண்ணமிகு அணிவகுப்பு.

உடல்திறன் வெளிப்பாடு. நாட்டுப்புற நடனம், திறன்வெளிப்பாடு, அணிகூட்டம், பாடித் தீ. உலகளாவிய கிராமம். இளைஞர் மன்றம். உணவுத் திருவிழா. ஒருமைப்பாட்டு விளையாட்டு, பல்வண்ண ஒப்பனை பேரணி, வேடிக்கை செயல்பாடுகள், வீரதீர செயல்பாடுகள், அறிவுசார் செயல்பாடுகள், இரவு நடைப் பயணம், மிதிவண்டி பயணம், காவல் துறை சாகச நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்வுகள் இவ்விழாவில் நடைபெறுகிறது.

### பிற மாநிலங்களின் கலை நிகழ்ச்சிகள்!

வீர தீர செயல்பாடுகள். வேடிக்கை விளையாட்டுகள் உள்ளிட்ட நிகழ்வுகளை செய்து காட்ட உள்ளனர். இந்த பெருந்திரளணி நிகழ்விற்காக மேடை, அரங்கங்கள். கூடாரங்கள் அமைக்கும் பணிகள், மின்சார வசதி, குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள், மின் விளக்குகள், சமையற்கூடங்கள், முக்கிய பிரமுகர்களுக்கான அறைகள், மருத்துவமனை, மார்க்கெட் பகுதி, சாலை அமைத்தல், தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவது மற்றும் அனைத்து பகுதிகளையும் கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு கேமரா பொருத்துனது அதை கண்காணிப்பு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், பள்ளிக்கல்வி துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம். பொதுப்பணித்துறை, பொதுப்பணித் துறை மின்னியல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மருத்துவத் துறை, தீயணைப்புத் துறை மற்றும் காவல் துறை, போக்குவரத்துறை மற்றும் சுற்றுலாத் துறை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் மணப்பாறை நகராட்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

### 2,422க்கும் மேற்பட்ட கூடாரங்கள்!

தமிழ்நாடு, இந்தியாவின் அனைத்து மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு தங்கள் கலாச்சாரம், பண்பாடு குறித்த செயல்பாடுகளை நிகழ்த்திக் காட்ட உள்ளனர். இந்நிகழ்வில் சாரணர்கள் தங்குவதற்காக 1000 கூடாரங்கள், சாரணியர்கள் தங்குவதற்காக 900 கூடாரங்கள், திரிசாரண - சாரணியர்கள் தங்குவதற்காக 450 கூடாரங்கள், ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 40 கூடாரங்கள், 30 கூடாரங்கள் வெளிநாட்டினர்கள் தங்குவதற்கும், அலுவலகப்பணிக்காக 32 கூடாரங்கள் என மொத்தம் 2,422க்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### சிறப்பான அடிப்படை வசதிகள்!

மேலும் 2,500-க்கும் மேற்பட்ட குளியல் அறைகள் மற்றும் கழிவறைகள் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கூடாரத்தில் தங்குவதற்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் சிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இந்நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு அவர்களின் உணவு முறைக்கு ஏற்றார்போல் உணவு தயாரித்து வழங்கிடும் வகையில் 72 சமையல் செய்யும் கூடங்கள் மற்றும் 30-க்கும் மேற்பட்ட உணவு அருந்தும் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

### 350 கண்காணிப்பு கேமராக்கள்!

மேலும், இந்த விழா நடைபெறும் வளாகத்தின் பாதுகாப்புக்காக அனைத்துப் பகுதிகளையும் கண்காணிக்கும் வகையில் 350-க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதை கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு அறை அமைக்கப்பட்டு கண்காணிக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சாரண சாரணியர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிடும் வகையில் உணவுப்பொருட்கள் பால், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்வதற்காக 50-க்கும் மேற்பட்ட கடைகளுடன் கூடிய மார்க்கெட் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

### மருத்துவமனைகள் - தீயணைப்பு வாகனங்கள்!

அனைத்துப் பகுதிகளுக்கும் தடையில்லாமல் மின்சாரம் வழங்கிடும் வகையில் அனைத்து பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கேற்றார் போல் பயன்படுத்திடும் வகையில் ஜெனரேட்டர் வசதியும் அமைக்கப்பட்டுள்ளது. விழா நடைபெறும் வளாகத்தில் மருத்துவ சேவை வழங்கிடும் வகையில் 25 படுக்கை வசதிகளுடன் 2 மருத்துவமனைகள் மற்றும் 15 நடமாடும் மருத்துவ வாகனங்கள், அவசர உதவிக்காக 15க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்களும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சார்பில் தேவையான இடங்களில் தீயணைப்பு வாகனங்களையும், தீயணைப்பு கருவிகளும் வைக்கப்பட்டு உள்ளது.



அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், அரியலூர் மாவட்ட அளவிலான அரசுப்பள்ளிகளின் நூற்றாண்டு திருவிழாவினை தொடங்கி வைக்கும் வண்ணம் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சுடர் ஏற்றி தொடங்கி வைத்து. பள்ளியின் நூற்றாண்டு விழா மலரின் முகப்பு தோற்றத்தை வெளியிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி. அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



குடந்தை நகரின் முதல் நகரச் செயலாளர் மிசா சு.பத்மநாபன் 36ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் அமைச்சர் கோ.வி.செழியன், முன்னாள் எம்.பி.செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாவட்ட மற்றும் மாகரக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அஞ்சலி செலுத்தினர்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு | மங்கையர்கரசி திருமண மண்டபம், வடலூர், கடலூர். |
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18

நாள் : 01-02-2025

